<u>தொழிலாளர் நீதிமன்றம். காஞ்சிபுரம்</u>

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **ID.No.** | **:** | 251/2019 | சாட்சியம் | **:** | **MW2** |
| **Name** | **:** | திரு.மோகன் | | | |
| **Date** | **:** | **15.10.2025** | | | |
| **Time** | **:** | **12.18 p.m to 1.18 p.m** | | | |

<u>நி.த.சா.**2.**திரு.மோகன் என்பவர் இன்று ஆஜர் செய்யப்பட்டு சத்திய பிரமாணம்செய்விக்கப்பட்டார். குறுக்கு விசாரணை</u>

எங்கள் கம்பெனியில் ஒரு பிளான்ட் உள்ளது. Assembling, Forging, Machining என மூன்று லைன்கள் உள்ளது. நான் ஃபோர் ஜிங் துறை ஹெட் ஆக உள்ளேன். இந்த வழக்கில் சம்பந்தப்பட்ட தொழிலாளர்கள் கோடீஸ்வரன், வினோத், விநாயகமூர்த்தி சசிகுமார், கோவிந்தராஜ் Forging லைனில் வேலை பார்க்கிறார்கள் என்றால் ஆமாம். இந்த வழக்கு சம்பந்தமாக நான் எந்தெந்த ஆவணங்களை பார்வையிட்டேன் என்றால் Value Stream Map, Quality Records, 1st piece pass off, leadership standard work,போனற் இதர ஆவணங்களை பார்த்தேன். இந்த வழக்கில் சம்பந்தப்பட்ட தொழிலாளர்கள் டிப்ளமோ முடித்தவர்கள் என்றால் ஆமாம். அவர்கள் அனைவரும் 2009 - 2012 ஆண்டுகளில் ட்ரைனியாக

சேர்க்கப்பட்டவர்கள் என்றால் ஆமாம். அந்த தொழிலாளர்கள் ட்ரெய்னிங் பெற்ற காலகட்டத்தில் அவர்களுக்கான வேலையை ஆபரேட்டர்கள் தான் அவர்களுக்கு சொல்லிக் கொடுத்தார்கள் என்றால் இல்லை. சூப்பர்வைசர் தான் சொல்லிக் கொடுத்தார். சூப்பர்வைசர்கள் எக்ஸிக்யூட்டிவ், சீனியர் எக்ஸிக்யூட்டிவ் என்ற கேடரில் இருப்பார்கள் என்றால் ஆமாம். 2011-2012 ஆண்டு வாக்கில் சசிகுமாரை தவிர மற்ற டிப்ளமோ ட்ரைனிங் ஆக இருந்தவர்களை OED யாக நியமனம் செய்தாகள் என்றால் ஆமாம். 61 தொழிலாளர்களை OED ஆக நியமனம் செய்வதற்கு முன்னரே சசிகுமார் OED-யாக நியமிக்கப்பட்டு விட்டார் என்றால் ஆவணங்களை பார்த்தால் தான் தெரியும். 2014 பிறகு OED ட்ரைனியாக, அப்ரன்டீசாக நியமிக்கப்பட்டவர்கள் தகுதிகாண் பருவத்தில் வைக்கப்பட்ட நிரந்த தொழிலாளியாக மாற்றப்பட்டவில்லை என்றால் ஆமாம். தொ.சா.ஆ.33 எங்கள் நிறுவனத்தின் SOP என்றால் ஆமாம். Indirect employee என்பவர் Executive மற்றும் அதற்கு மேல் நிலையில் உள்ள ஊழியர்கள் என SOP யில் சொல்லப்பட்டுள்ளது என்றால் ஆமாம். Forging line யில் Cold Form, Warm form என இரண்டு Machine உள்ளன என்றால் ஆமாம். Warm form Machine-ல் சசிகுமார் விநாயகமூர்த்தி வேலை பார்த்து வருகிறார்கள் என்றால் Warm form Machine-ல் வேலை பார்க்கவில்லை. Forging line யில் வேலை பார்க்கிறார். கோவிந்தராஜ் வினோத் ஆகியோர் Cold Form,

Warm form மெஷினில் வேலை பார்க்கிறார்கள் என்றால் இல்லை ஃபோர்ஜிங் லைனில் தான் வேலை பார்க்கிறார்கள். Cold Form, Warm form தவிர்த்தும் இதர machine லும் வேலை பார்க்கிறார்கள். Tool Assembly-யில் கோடீஸ்வரன் வேலை பார்க்கிறார் என்றால் ஆமாம். எங்களுடைய Forging line யில் வர கூடிய Raw Material-கள் அளவீடுகளுக்கு ஏற்ப வெட்டி வெப்பப்படுத்தி வடிவமைத்து அதன் பின்னர் குளிர்விக்கப்படும் என்றால் சரிதான். இந்த வழக்கு சம்பந்தப்பட்ட தொழிலாளர்கள் உதிரி பாகங்களை ஆய்வு செய்து பின்னர் இயந்திரங்களில் சரியாக உள்ளனவா என பொருத்தி அந்த இடங்களை தூய்மைப்படுத்தி வைக்க வேண்டும் என்றால் தூய்மைப்படுத்துவது என்பது சரியானது அல்ல 5-S என்பது தான் சரியானது ஆகும். இந்த பிராசஸில் ஆப்ரேட்டர்களின் வேலை என்ன என்றால் மெஷின் உற்பத்தியை சரி பார்ப்பது, அளவுகளை சரி பார்ப்பது உற்பத்தி செய்ய பயன்படும் பேரா மீட்டர்ஸ்சை சரிபார்ப்பது ஆகிய பணிகளை மேற்கொள்வார்கள். எங்கள் நிறுவனத்தில் டொயோட்டோவின் ஆர்டர்கள் 2012 ஆம் ஆண்டிலிருந்து உள்ளது. 2012-2013 ஆண்டுகளில் எங்கள் நிறுவனத்தில் இருந்து போன உதிரி பாகங்களில் டொயோட்டாவுக்கு அனுப்பப்பட்டதில் ஏதேனும் குறைபாடுகள் இருந்தனவா என்றால் ஆவணங்களை பார்க்க வேண்டும். 2012-2013 ஆண்டுகளில்

டொயோட்டோவில் இருந்து ஒரு குழுவினர் வந்து எங்கள் நிறுவனத்தில் ஆய்வு செய்தார்கள் என்றால் ஆமாம். எந்த காரணத்திற்காக ஆய்வு செய்தார்கள் என்றால் Delivery Schedule improvement-ற்காக ஆய்வு செய்தார்கள். இந்த Delivery Schedule improvement-ற்காக லைனில் இருந்து Toyota விற்கு Communication தர ஒரு One man One line concept உருவாக்கப்பட்டது என்றால் ஆவணங்களை பார்க்க வேண்டும். One man One line concept அடிப்படையில் தான் டீம் லீடர் என்ற பதவி உருவாக்கப்பட்டது என்றால் ஆவணங்களை பார்த்தால் தான் தெரியும். எந்த ஆவணங்களை பார்த்தால் தெரிய வரும் என்றால் மீட்டிங் சம்பந்தப்பட்ட ஆவணங்களை பார்த்தால் தான் தெரியும். அந்த ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய இயலுமா என்றால் கோப்புகளை பார்த்து பின்னர் தான் சொல்ல இயலும். மீட்டிங் சம்பந்தப்பட்ட ஆவணங்களை இந்த நீதிமன்றத்தில் சாட்சியம் சொல்வதற்கு முன்னர் படித்து பார்க்கவில்லை என்றால் ஆமாம். 2015 ஆம் ஆண்டு இந்த நிறுவனத்தில் வேலை பார்த்த OED தொழிலாளர்கள் ஆப்பரேட்டிங் இன்ஜினியர் ஆக நியமனம் செய்யப்பட்டார்கள் என்றால் ஆவணங்களை பார்த்தால் தான் தெரியும். எந்த நிலையில் இருந்தவர்கள் ஆபரேட்டிங் இன்ஜினியராக நியமிக்கப்பட்டார்கள் என்றால் Trainee ஆக இருந்தவர்கள் நியமிக்கப்பட்டார்கள். இந்த வழக்கு சம்பந்தப்பட்ட 33 தொழிலாளர்கள் OED ஆக இருந்து OE ஆக நியமனம்

செய்யப்பட்டார்கள் என்றால் ஆமாம். ஆனால் 33 தொழிலாளர்கள் இல்லை 23 தொழிலாளர்கள் மட்டுமே அவ்வாறு நியமிக்கப்பட்டார்கள். OED ஆக இருந்து OE ஆக பணி மாறுதல் செய்யப்பட்டாலும் கூட அவர்கள் OED ஆக செய்த வேலையை தான் OE ஆக இருந்த போதும் செய்தார்கள் என்றால் இல்லை. கூடுதல் பொறுப்பும் வழங்கப்பட்டது. பதவியின் பெயர் மட்டும் தான் மாற்றப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. 01.06.2018 எங்கள் நிறுவனத்திற்கும் தொழிற்சங்கத்திற்கும் இடையே முத்தரப்பு ஒப்பந்தம் தொ.சா.ஆ. **24** ஏற்பட்டது என்றால் ஆமாம். OE ஆக இருந்த 33 தொழிலாளர்கள் அந்த ஒப்பந்தத்தின் அடிப்படையில் ஆபரேட்டார்களா நியமனம் செய்யப்பட்டார்கள் என்றால் ஆவணங்களை பார்த்தால் தான் தெரியும். தொழிலாளர்கள் எத்தனை பேர் ஒப்பந்தத்தின் அடிப்படையில் OE ஆக இருந்து ஆப்பரேட்டராக நியமிக்கப்பட்டார்கள் என்றால் 33 பேர். தமிழ்ச்செல்வன் எங்கள் நிறுவனத்தில் அசிஸ்டன்ட் மேனேஜராக உள்ளார் சீதாராமன் சீனியர் எக்ஸிக்யூட்டிவாக உள்ளார். Forging line யில் Supervisor (Executive) ஆக யார் உள்ளார்கள் என்றால் கார்த்திகேயன், யோகராஜ் மற்றும் சீதாராமன் உள்ளனர். கார்த்திகேயன் யோகராஜ் சீதாராமன் பணி என்ன என்றால் Men, Machine, Method, Material ஆகியவற்றை உற்பத்தி மேற்கொள்வதற்கு உறுதி படுத்த வேண்டும். எங்கள் நிறுவனத்தில் மொத்தம் மூன்று ஷிப்ட்கள் உள்ளன. Supervisor,

Executive நிலையில் உள்ளவர்களுக்கும் மூன்று ஷிப்ட் வேலை உண்டு. டீம் லீடர் மற்றும் ஆபரேட்டர்களுக்கு ஷிப்ட் ஷெட்யூல் போடப்படும் Executive நிலையில் உள்ளவருக்கு ஷிப்ட் ஷெட்யூல் போடப்படாது. Executive நிலையில் உள்ளவர்கள் எந்த ஷிப்டிற்கு வேலைக்கு வருவார்கள் என்றால் நிறுவனத்தின் தேவைக்கு ஏற்ப வருவார்கள்.

தொடர்ச்சி வேண்டுகோளின்படி ஒத்திவைக்கப்படுகிறது.

S SUJATHA

Presiding Officer, Labour Court
Digitally signed by S SUJATHA
Location: Kancheepuram
Date: 2025.10.16 10:10:17 +0530

Presiding Officer,
Labour Court, Kancheepuram.
Dated:15.10.2025.